# ஒரு **மெதடிஸ்த** வாழ்க்கை முறை

**மெதடிஸ்த திருச்சபையின் திருப்பணி அழைகூவலானது இறையன்பின் நற்செய்தியை கிறிஸ்துவினூடாக மாறுத்தரமளிப்பதற்கும், அதன் சீஷத்துவத்தை ஆராதனை மற்றும் திருப்பணி என்பவற்றுக்கூடாக வாழ்ந்து காண்பிப்பதற்குமேயாகும்**

இறைவனின் உதவியுடன், எங்களால் முடியுமானவரை:

## ஆராதனை

- நாம் அனுதினமும் ஜெபம் செய்வோம்.
- நாம் தொடர்ச்சியாக மற்றவர்களுடன் இணைந்து ஆராதனை செய்வோம்.
- நாம் திருமறையிலிருந்தும் இவ்வுலகிற்கூடாகவும் இறைவனுக்குச் செவிகொடுப்பதுடன் அவரைக் கண்டடைவோம்.

## கற்றலும் பராமரித்தலும்

- நாம் நம்மையும் நம்மைச் சூழ உள்ளவர்களையும் பராமரிப்போம்
- நாம் எமது விசுவாசத்தைக் குறித்து மேலும் கற்றறிவோம்
- நாம் உபசரணை மற்றும் உதாரத்துவம் என்பவற்றை நடைமுறைப்படுத்துவோம்.

## சேவையாற்றல்

- நாம் எமது சமுதாயத்தினருக்கும் அதற்கு அப்பாற்பட்டவர்களுக்கும் உதவிபுரிவோம்.
- நாம் இறைவனின் சிருஷ்டிப்பையும் அவரின் அனைத்து கொடைகளையும் பராமரிப்போம்.
- நாம் அநீதிக்கு எதிராக எழுந்துநிற்போம்.

## நற்செய்திப்பணி

- நாம் இறைவனின் அன்பை அறிவிப்போம்.
- நாம் மற்றவர்களும் இயேசுவண்டை வரும் விதத்தில் வாழ்ந்து காண்பிப்போம்.
- நாம் எமது விசுவாசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வோம்.

**இவ்வுலகம் மறுசீரமைய இறைவனின் திருச்சபைக்குள்ளேயும்,**
**அதற்கு அப்பாலும் நாம் ஆசீர்வாதமாயிருப்போம்!**

The **Methodist** Church

# ஒரு மெதடிஸ்த வாழ்க்கை முறை

**ஒரு மெதடிஸ்த வாழ்க்கைமுறையானது எம்மை சேர்ந்து வளர ஊக்குவிக்கின்றது. கீழுள்ள வினாக்களை தொடர்ச்சியாய் மற்றவர்களுடன் கலந்துரையாடுவதற்குரிய நேரத்தை ஒதுக்கீடு செய்தல் நன்று**

## ஆராதனை

- உங்கள் ஜெப வாழ்வின் வழிமுறைகள் எவை?
- ஜெபிப்பது எவ்வளவு தூரம் இலகுவானது அல்லது கடினமானது?
- அண்மையில் திருமறைக்கூடாகவோ அல்லது ஆராதனைக்கூடாகவோ உங்கள் உள்ளங்களில் பேசப்பட்ட விடயமென்ன?
- இறைவனிடம் கிட்டிச்சேர்தலையோ அல்லது விலகிச் சென்றதனையோ இறுதியாக எப்பொழுது உணர்ந்தீர்கள்?

## கற்றலும் பராமரித்தலும்

- எமது கடைசி சந்திப்பின் பின்னர் நீங்கள் எவ்வாறு உங்களது உதாரத்துவத்தை நடைமுறைப்படுத்தினீர்கள்?
- நீங்கள் எவ்வாறானதொரு உபசரிப்பை அண்மைக் காலத்தில் மற்றவர்களுக்குக் காண்பித்தீர்கள்?
- உங்களை நீங்கள் எவ்வாறு பராமரிக்கின்றீர்கள்?
- இக்காலப்பகுதியில் எவற்றை மற்றும் எவ்வாறு நீங்கள் கற்றுக்கொள்கிறீர்கள்?

## சேவையாற்றல்

- நீங்கள் உங்களது சமுதாயத்தினருக்கும் அதற்கு அப்பாற்பட்டவர்களுக்கும் சேவையாற்ற எவ்வாறு முயற்சிக்கின்றீர்கள்? மற்றவர்களுக்கு சேவையாற்றும்போது உங்களை ஊக்குவிக்கும் அல்லது தடைசெய்யும் காரணி என்ன?
- இறைவனுடைய சிருஷ்டிப்புக்களை நீங்கள் எவ்வாறு பராமரிக்கின்றீர்கள்?
- இறைவன் கொடுத்த நன்கொடைகளை எவ்வாறு உபயோகிக்கின்றீர்கள் (உங்களது பொருளாதார மூலதனங்கள் உட்பட)?
- எப்பேற்பட்ட அநீதியான சிக்கல்களைக் குறித்து நீங்கள் கரிசனையாயிருக்கிறீர்கள்? பதிலுக்கு நீங்கள் என்ன செய்கின்றீர்கள்?

## நற்செய்திப்பணி

- கடவுளைக் குறித்து எப்போ நீங்கள் கடைசியாக கலந்துரையாடினீர்கள்?
- நாம் கடைசியாக சந்தித்ததன் பின்னர் உங்களுடைய விசுவாசத்தை நீங்கள் பகிர்ந்துகொண்ட சந்தர்ப்ப சூழ்நிலைகள் எவை?
- உங்களுடைய விசுவாசத்தை பகிரக்கூடிய சந்தர்ப்பங்களின் போது, உங்களது பிரதியுத்தரம் எவ்வாறாயிருந்தது?
- கிறிஸ்தவ விசுவாசத்தை ஏற்றுக்கொள்ளும்படி உங்களால் அழைப்புவிடுக்கக்கூடிய யாராயினும் இருக்கின்றார்களா?

**இவ்வாழ்க்கை முறையினுள் எம்மை அர்ப்பணிக்கும்போது நாம் ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பது எப்படி?**

© Trustees for Methodist Church Purposes, 2020 Registered charity no. 1132208